සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சட்டக் கல்லூரி அனுமதித்தல் பரீட்சை - 2020 (2019 ஜுன்)**
Sri Lanka Law College Entrance Examination - 2020 (June 2019)

**(01) மொழித்திறமை**
Language Skills

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✻ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.**

**0 1 2 3 4 5 6 7 8 9**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கங்களிலும் எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

✻ இவ்வினாத்தாள் 11 பக்கங்களில் 38 வினாக்களைக் கொண்டுள்ளது.

✻ எல்லா வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✻ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✻ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✻ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

✻ கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✻ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✻ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 10 | |
| 3 | 11 - 17 | |
| 4 | 18 - 30 | |
| 5 | 31 -35 | |
| 5 -7 | 36 | |
| 8 - 9 | 37 | |
| 10 -11 | 38 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளை மதிப்பீடு செய்தவர் | |
| பரிசோதித்தவர் | |
| | |
| பிரதம பரீட்சகர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

● **1** தொடக்கம் **3** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

1. (1) இடப்பரப்பு (2) இடைஞ்சல் (3) உடன்தை (4) உறுதியளி (.........)

2. (1) நிறுவகம் (2) நிறுவாகம் (3) நிறுவனம் (4) நிர்வாகம் (.........)

3. (1) கற்சிலை (2) கற்பனை (3) கல்த்தரை (4) பங்காளி (.........)

● **4** தொடக்கம் **6** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களின் அகராதி வரிசையை மிகச் சரியாகக் காட்டி நிற்கும் விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

4. (அ) நட்டம் (ஆ) தங்கம் (இ) எதிர்பார்ப்பு (ஈ) உச்சம்
   (1) இ, ஈ, அ, ஆ (2) ஈ, அ, இ, ஆ (3) ஆ, ஈ, அ, இ (4) ஈ, இ, ஆ, அ (.........)

5. (அ) பேச்சுரிமை (ஆ) யுகம் (இ) வாக்குரிமை (ஈ) வடக்கு
   (1) ஈ, இ, ஆ, அ (2) அ, ஆ, ஈ, இ (3) ஈ, இ, அ, ஆ (4) அ, ஈ, இ, ஆ (.........)

6. (அ) தற்பெருமை (ஆ) தன்னம்பிக்கை (இ) ஞானம் (ஈ) நியாயம்
   (1) இ, ஈ, ஆ, அ (2) இ, ஆ, அ, ஈ (3) அ, ஆ, ஈ, இ (4) இ, அ, ஆ, ஈ (.........)

● **7** தொடக்கம் **9** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களைப் புணர்த்தினால் வரும் புணர்மொழியைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அதனைக் குறிக்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

7. எள் + நெய்
   (1) எள்நெய் (2) எண்ணெய் (3) எண்ணை (4) எள்ணெய் (.........)

8. ஒன்று + இரவு
   (1) ஒன்றிரவு (2) ஒருஇரவு (3) ஒற்றிரவு (4) ஓரிரவு (.........)

9. தேசம் + அதிபதி
   (1) தேசபதி (2) தேசாதிபதி (3) தேசதிபதி (4) தேசத்ததிபதி (.........)

● **10** ஆம் வினாவில் மாறியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால் கருத்துள்ள சொல்லொன்று வரும். அச்சொல்லை வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(01 புள்ளி)*

10. த, று, ல், தி, உ, ளி, ய, த் (.............................................)

[பக் 3 ஐப் பார்க்க

● **11** தொடக்கம் **15** வரையிலான வினாக்களிலே தரப்பட்டுள்ள மரபுச்சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் தரும் சரியான கருத்தைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(05 புள்ளிகள்)*

11. உருத்திராட்சப் பூனை
    (1) பதுங்கியிருப்பவன்
    (2) வேடதாரி
    (3) திருடக்காத்திருப்பவன்
    (4) தவறாக வழிநடத்துபவன் (.........)

12. உலைவைத்தல்
    (1) அழிவு வருவித்தல்
    (2) சமையல் செய்ய ஆரம்பித்தல்
    (3) நெருப்புமூட்டல்
    (4) அடுப்பு மூட்டல் (.........)

13. காது குத்தல்
    (1) செவிமடுத்தல்
    (2) நகையணிய ஆயத்தப்படுத்தல்
    (3) உடன்பட வைத்தல்
    (4) ஏமாற்றல் (.........)

14. செவிசாய்த்தல்
    (1) ஒரு பக்கம் சாய்தல்
    (2) கேட்டல்
    (3) உடன்படல்
    (4) ஒருகாதால் கேட்டு மறுகாதால் விட்டுவிடல் (.........)

15. நெருப்பெடுத்தல்
    (1) கோபித்தல்
    (2) விரட்டுதல்
    (3) விளக்கேற்றல்
    (4) தீ மூட்டல் (.........)

● **16** தொடக்கம் **18** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகள் ஒவ்வொன்றும் தரும் கருத்தினைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

16. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
    (1) அடிக்க அடிக்க பாரம்மிக்க அம்மியும் அசையும்
    (2) நன்றாகப் பொளியப்பட்ட அம்மியே எதையும் அரைப்பதற்கு ஏற்றதாயிருக்கும்
    (3) விடாமுயற்சி வேண்டிய பலன் தரும்
    (4) திரும்பத் திரும்ப அடித்தால் அம்மியும் நொருங்கிப்போம் (.........)

17. ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
    (1) ஊரைப் பிரித்துக் கொண்டால் எல்லோரும் கொண்டாடலாம்
    (2) ஊரில் பல மேடைகள் அமைந்தால் கூத்தாடிகளுக்கு இலாபம்
    (3) ஊர் ஒன்றுபட்டிருந்தால் கூத்தாடிகளுக்கு பிழைக்கமுடியாது
    (4) ஒற்றுமையே ஊருக்கு நல்லது (.........)

[பக் 4 ஐப் பார்க்க.

18. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது
    (1) ஏட்டிலே சுரைக்காய் என்று எழுதி அதனைக் கறியாக்க முடியாது
    (2) வெறும் புத்தகப் படிப்பால் பயனில்லை
    (3) கறி சமைக்கவேண்டுமானால் உண்மையான சுரைக்காய் தேடவேண்டும்
    (4) பள்ளிப் படிப்பைக் காட்டிலும் பயிர்வளர்ப்பது கூடிய நலன் தரும் (.........)

● **19** தொடக்கம் **21** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் **ஒத்தகருத்தைத்** தெரிவுசெய்து அதனைக் குறிக்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

19. அழுக்காறு
    (1) சாக்கடை (2) பொறாமை (3) வடிகால் (4) வழுக்கியாறு (.........)

20. வேட்பாளர்
    (1) அபேட்சகர் (2) தேர்வுநாடி (3) விண்டார் (4) போட்டியாளர் (.........)

21. தத்துவம்
    (1) அளவையியல் (2) தருக்கம் (3) மெய்யியல் (4) ஏரணம் (.........)

● **22** தொடக்கம் **24** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொல் ஒவ்வொன்றினதும் **எதிர்ப்பொருள்** தரும் சொல்லைத் தெரிவுசெய்து, அதனைக் குறிக்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

22. அஞ்சுதல்
    (1) கெஞ்சுதல் (2) மிஞ்சுதல் (3) அஞ்சாமை (4) எதிர்த்தல் (.........)

23. அணுகல்
    (1) அகலல் (2) அருகாமை (3) நாணுதல் (4) உறுதி (.........)

24. அந்தரங்கம்
    (1) அரங்கம் (2) ஆதங்கம் (3) அலம்பல் (4) பகிரங்கம் (.........)

● **25** தொடக்கம் **27** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொல்லுடன் **பொருந்தாத** சொல்லைத் தெரிவுசெய்து, அதனைக் குறிக்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

25. அரண்
    (1) மதில் (2) கோட்டை (3) சிவன் (4) காவல் (.........)

26. கரி
    (1) கருமை (2) யானை (3) சாட்சி (4) கடி (.........)

27. மதி
    (1) சந்திரன் (2) பெருமை (3) அறிவு (4) புத்தி (.........)

● **28** தொடக்கம் **30** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டம் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தனிச்சொல்லைத் தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(03 புள்ளிகள்)*

28. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவை
    (1) ஐம்பொறி (2) பஞ்சாங்கம் (3) ஐந்திணை (4) ஐம்பூதம் (.........)

29. கடவுள் இல்லை என்று கூறுபவன்
    (1) இரணியன் (2) ஆத்திகன் (3) நாத்திகன் (4) பாமரன் (.........)

30. தமிழில் திரிந்து வழங்கும் வடமொழிச் சொல்
    (1) தற்பவம் (2) தற்சமம் (3) ஆரியம் (4) கொடுந்தமிழ் (.........)

[பக் 5 ஐப் பார்க்க.

● **31** தொடக்கம் **35** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையாயின் அவற்றைத் திருத்தி சரியான வாக்கியங்களை வினாவின் கீழே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக. அது சரியாயின் 'சரி' என்று மட்டும் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

*(10 புள்ளிகள்)*

31. பள்ளிக்கூடம் போகாவண்ணம் தந்தையார் என்னைத் தடக்கிவிட்டார்.

.....................................................................................................

.....................................................................................................

32. எத்தனை இடர்கள் எதிர்வந்த போது எடுத்த காரியத்தை முடிக்காது விடமாட்டேன்.

.....................................................................................................

.....................................................................................................

33. அந்த நாட்டிலே வறுமையும் நோயும் களவும் தாண்டவமாடுகின்றது.

.....................................................................................................

.....................................................................................................

34. இந்த நூல், பேராசிரியராலே பல்லாண்டுகள் முயன்று எழுதியது.

.....................................................................................................

.....................................................................................................

35. நான் கட்டுரை எழுதும்போது எழுத்துப் பிழைகள் அதிகமாக ஏற்படுகின்றது.

.....................................................................................................

.....................................................................................................

36. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமாக** விடை தருக.

புராதன காலத்து சிங்களவரின் தொழினுட்பச் சாதனங்களுள் மிகச் சிறந்தவை அவர்களின் நீரப்பாசனக் குளங்களும் கால்வாய்களுமேயாகும். மாரிக் காலத்து மழை நீரை செயற்கை வாவிகளில் தேக்கி வைத்தற் பொருட்டு, வறட்சிக் காலங்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குக்களுக்குக் குறுக்கே அணைகளைக் கட்டும் முறை இலகுவான ஒரு செயலாகும். இம்முறை இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் பயின்று வந்தது. பண்டைச் சிங்களப் பொறியியலாளர் இத்தகைய இலகுவான திட்டங்களைச் செயற்படுத்திலர். அவர்களுடைய திட்டங்கள் பாரியவை; நீர்ப்பாய்ச்சற்கலை முறையின் முக்கிய விதிகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டவை. வற்றாத ஆறுகளுக்குக் குறுக்கே பெரும் பாறைப் பாளங்களைக் கொண்டு அவர்கள் அணைகளைக் கட்டினர். இப்பாளங்கள் நீர்க்கசிவைத் தடுத்தல் வேண்டி நன்கு செப்பமிடப்பட்டு இறுக்கமாகப் பொருத்தப்பட்டன. (வசபனால் கி.பி. முதலாம் நூற்றாண்டிற் கட்டப்பட்டு மகாசேனனால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற் பெருப்பிக்கப்பட்ட) எலகரக் கால்வாயின் அணையும், (கி.பி. ஆறாம் நூற்றாண்டில் முதலாம் அக்கபோதியால் அமைக்கப்பட்ட) மினிப்பே அணையும் பண்டைச் சிங்களவர் கட்டிய அணைகளிற் தலை சிறந்தன.

பாரித்த நீர்ப்பாய்ச்சற் திட்டங்களைச் செயற்படுத்த முயன்ற முதன் மன்னன் வசபனாக இருத்தல் கூடும். இவன் பதினொரு குளங்களையும் (இவற்றுள் ஆறு அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.) எலகர, யோத அல உட்படப் பன்னிரு கால்வாய்களையும் வெட்டினான். நீர்ப்பாய்ச்சற் றுறையில் ஆற்றிய சேவைகளுக்காக, 'மின்னேரியாவின் தெய்வமாக' மக்களாற் போற்றப்பட்ட மகாசேனன் (கி.பி. 275 - 301) பதினாறு குளங்களைக் கட்டினான். இவற்றுள் மின்னேரி, கவுதுலுவாவி ஆகியன தனித்தனியே 4500 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பைக் கொண்டன.

[பக் 6 ஐப் பார்க்க.

அனுபவம், வளர்ந்து வந்த அறிவு என்பனவற்றின் துணைகொண்டு புராதன சிங்கள மன்னர்கள் மிகவும் பெரிய திட்டங்களைச் செயற்படுத்தப் பேரவாக்கொண்டனர். தாதுசேனனால் (கி.பி. 455 - 479) கட்டப்பட்ட கலாவாவி 6380 ஏக்கர் பரப்பையும் 4 மைல் நீளமுள்ள அணையையும் கொண்டது. தாதுசேனன் காலத்திற்றான் கலாவாவியிலிருந்து அனுராதபுரத்திலுள்ள திசா வாவிக்கு நீர் கொண்டு வருதற்காக ஜயகங்கை கட்டப்பட்டது. இது மனிதனால் ஆக்கப்பட்ட ஓர் ஆறேயாகும். இது ஒரு சீராக 40 அடி அகலமும் 54 மைல் நீளமும் கொண்டது. இக்கால்வாயினை நெறியறிந்து அமைத்ததன் மூலம் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த, பெயரறியப்படாத பொறியியலாளர்கள் மதிப்பிடற்கரிய அருஞ்செயல் ஒன்றனை ஆற்றிப் போந்தனர். முதற் பதினேழு மைல்களுக்கும் கால்வாயின் சாய்வு மைலுக்கு ஆறு அங்குலமாக அமைந்தது. இவ்வுண்மை தொழில் நுட்பத் துறையிலும், நில அளவை, மட்டம் பார்த்தல், நெறியறிதல் என்னும் முறைகளிலும் சிங்களவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவை எடுத்தியம்புகிறது. துரதிட்ட வசமாக அவர்கள் கையாண்ட முறைகள் எமக்குத் தெரிந்தில. இவர்கள் எக்கருவிகளைப் பயன்படுத்தினர் என்பது பற்றிய செய்திகளும் எமக்குக் கிடைத்தில. இப்பண்டைய வேலைப்பாடுகளிற், சில நுட்பமான கருவிகளை, அவை செப்பமற்ற முறையில் அமைக்கப்பட்டிருப்பினும், நம்முன்னோர் கையாண்டிராவிடின், அவற்றினைச் சாதித்திருத்தல் முடியாது என்பது வெள்ளிடைமலை.

விலையுயர்ந்த நுட்பமான புதிய கருவிகளின் துணையுடன்கூட, இன்றைய பொறியியலாளன் பண்டைய திட்டங்களை அடியொற்றுதல் தவிரப் பிறிதொன்றும் செய்ய முடிவதில்லை என வரும் அறிக்கைகளைப் பார்க்குந் தோறும், எமக்குத் தெரியாத பண்டைய தொழினுட்ப அறிஞர்கள் பால் நாம் கொண்ட மதிப்பு பன்மடங்காக அதிகரிக்கின்றது. இக்காலப் பொறியியலாளர் சிலர் இப் பண்டைய பொறியியலாளர் மீது தவறு காண முயன்ற நிகழ்ச்சிகள் சுவை தருவனவாயுள்ளன. ஒல்லாந்தப் பொறியியலாளர் ஒருவர் மானாமத்த வாவி (கட்டுக்கரைக்குளம்) தவறான முறையில் அமைக்கப்பட்டது என அறிக்கையிட்டார். எழுபத்தைந்தாண்டுகளின் பின்னர், கருவிகளைத் துணைகொண்ட ஒல்லாந்தரின் கருத்துத் தவறென்றும், பழைய திட்டத்தினைச் செயற்படுத்த முடியுமென்றும் ஆங்கில நிலவளவையாளர் ஒருவர் குறித்தார் (இது இன்று நிருபிக்கப்பட்டுள்ளது). மனிதன் உருவாக்கிய ஆறுகள், உலர்வலயத்திற் குறுக்கும் நெடுக்குமாக ஓடிப் பல்வேறு மட்டங்களில் உள்ள குளங்களுக்கும் பரந்த நெல் வயல்களுக்கும் நீரை அளித்தன. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இக்கால்வாய்களின் மொத்த நீளம் சுமார் 500 மைல்களுக்கு மேலாகவிருந்தது. எனவே, இலங்கை கொண்டிருந்த நீர்ப்பாய்ச்சல் வசதியின் புகழ் ஏனைய நாடுகளுக்குப் பரவியதில் வியப்பில்லை. இராஜதரங்கிணி என்ற காஷ்மீர வரன்முறை நூல் கி.பி. 745 இல் ஜயபீட மன்னன் தமது இராச்சியத்தில் குளங்களையும் கால்வாய்களையும் அமைத்தற்குச் சிங்களப் பொறியியலாளரினதும் தொழிலாளரினதும் துணை பெற்ற செய்தியை எடுத்தியம்புகிறது.

(i) மேலே உள்ள உரைப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் '√' எனவும் பிழையாயின் '×' எனவும் **பெட்டியில்** இடுக. பிழையாயின், சரியான விடையை தரப்பட்ட **புள்ளிக்கோட்டில்** எழுதுக. *(13 புள்ளிகள்)*

(அ) மகாசேன மன்னனால் கட்டப்பட்ட எலகர அணைக்கட்டு வசப மன்னனால் பெருப்பிக்கப்பட்டது. ☐

..........................................................................................

..........................................................................................

(ஆ) வசப மன்னனால் கட்டப்பட்ட குளங்களில் ஐந்து அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை. ☐

..........................................................................................

..........................................................................................

இ) எலகர, யோத அல என்பனவற்றைக் கட்டிய அரசனின் பெயர் தெரியவில்லை. ☐

..........................................................................................

..........................................................................................

[பக் 7 ஐப் பார்க்க.

(ஈ) ஜயகங்கையின் விசேட அம்சம் யாதெனில் அதன் அகலமும் நீளமும் ஆகும்.

..........................................................................................

..........................................................................................

(உ) இவ் உரைப்பகுதியில் குறிப்பிடப்பட்ட குளங்களில் மிகப் பெரியது கலாவாவி ஆகும்.

..........................................................................................

..........................................................................................

(ii) பின்வரும் வினாக்களுக்கு **சுருக்கமான** விடைகள் எழுதுக. *(07 புள்ளிகள்)*

(அ) இந்த உரைப்பகுதியில் ஆசிரியர் புலப்படுத்த முயன்றுள்ள பிரதான கருத்து யாது?

..........................................................................................

..........................................................................................

(ஆ) மழைநீரைத் தேக்கி வைத்தற் பொருட்டு ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்குக் குறுக்கே அணைகட்டும் முறையானது இலகுவான ஒரு செயலென கட்டுரை ஆசிரியர் கருதுவதற்கான காரணம் என்ன?

..........................................................................................

..........................................................................................

(இ) நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு புராதன சிங்களவர் பயன்படுத்திய கருவிகள் பற்றி இந்த உரைப்பகுதி புலப்படுத்துவது என்ன?

..........................................................................................

..........................................................................................

(ஈ) புராதன சிங்கள பொறியியலாளர் பிற நாடுகளில் நீர்ப்பாசனத் திட்டங்களை அமைக்க தொழினுட்ப உதவியை வழங்கினர் என்பதற்கு இவ்வுரைப் பகுதியில் காட்டப்படும் ஆதாரம் யாது?

..........................................................................................

..........................................................................................

(உ) கட்டுரையாசிரியர் பின்வரும் கூற்றின் மூலம் புராதன நீர்ப்பாசனத் திட்டம் பற்றி எத்தகைய எண்ணத்தை உருவாக்க முயல்கிறார்?

"விலையுயர்ந்த நுட்பமான புதிய கருவிகளின் துணையுடன் கூட இன்றைய பொறியியலாளன் பண்டைய திட்டங்களை அடியொற்றுதல் தவிரப் பிறிதொன்றும் செய்ய முடிவதில்லை."

..........................................................................................

..........................................................................................

(ஊ) பின்வரும் நிகழ்வுகள் நடைபெற்ற ஒழுங்கினை இலக்கமிட்டுக் காட்டுக.

(----------) கலா வாவியை மன்னன் தாதுசேனன் கட்டினான்.

(----------) மன்னன் முதலாம் அக்கபோதியினால் மினிபே அமைக்கப்பட்டது.

(----------) மகாசேனன் பதினாறு குளங்களைக் கட்டினான்.

(----------) வசப மன்னன் பதினொரு குளங்களையும் பன்னிரண்டு கால்வாய்களையும் கட்டினான்.

[பக் 8 ஐப் பார்க்க.

37. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை **மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி** எழுதுக. சுருக்கத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக. சுருக்கத்தின் இறுதியில் **சொற்களின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

கல்வியைப் பற்றிக் கோல்புருக் அவர்களின் நோக்கங்களை அவரின் அறிக்கையிலிருந்தே நாங்கள் அறிந்துகொள்ளலாம். ஆயினும் அவர் எழுதியதிலும் பார்க்க எழுதாதுவிட்டவை மிகவும் முக்கியமானவை. இத்தீவில் நோர்த் தேசாபதியின் ஆட்சிக்காலந்தொட்டு கோல்புருக்கின் அறிக்கை வெளிவந்த எல்லைக்குள், கல்வி விடயமாக சமயப்பற்று, மனிதத்தன்மை, பயனுடைமை என்னும் மூன்று காரணிகள் தொழிற்படுவதை அவதானிக்கலாம்.

கோல்புருக் அவர்களின் விதப்புரைகளில் சமய நோக்கங்களைக் காண்பது அரிது. அவர் சமயத்தையும், அரசாங்கத்திற்கும் இங்கிலாந்துத் திருச்சபைக்கும் உள்ள தொடர்பையும் முற்றாகக் கவனத்திற்கெடுக்கவில்லை. மிசனரிமாரின் கல்விச் சேவையை மெச்சியபோதிலும், அறிக்கையில் சமயமாற்றம் செய்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியது பற்றி எதுவுமே சிறப்பாகக் கூறவில்லை. பாதிரிமாரின் சேவைக்கு நன்கொடைப் பணமோ வசதியோ கொடுக்கவேண்டும் என்று அவர் கூறவில்லை. அவரின் விதப்புரை பாதிரிமாருக்குத் தம் சமயத்தைக் கல்வி மூலம் பரப்புவதற்குப் பூரண சுதந்திரம் அளித்தபோதிலும் கோல்புருக்கின் பிரதான கவனம் பாதிரிமார் வாயிலாக அரசாங்கத்திற்குச் செலவில்லாமற் கல்வி புகட்டுவித்தலேயாகும்.

அவரது கல்விச்சீர்திருத்தத்திற்கு அடிப்படையாய் அமைந்தது மனிதாபிமானம் என்று கூறுதல் மிகையாகாது. அரசியற் சீர்திருத்தத்தில் அன்னாரது தாராள மனப்பான்மை அதிகமான விதப்புரைகளில் வெளிப்படையாய்த் தோன்றியது. அறிக்கை, சிற்சில விடயங்களில், கல்வி மனிதரிடத்துள்ள "அர்த்தமற்ற வெறுப்புக்களை" நீக்க உதவுமென்றும், "தாராளக் கல்வி", என்பது "ஐரோப்பிய சாதனைகளிற் பயிற்சி" அடைய உதவுவதுடன் ஐரோப்பியருக்கு சமமாய் நாட்டின் நிருவாகத்தை வகுப்பதற்கும் உதவுமென்றும் குறிப்பிடுகிறது. எனினும், அவருடைய விதப்புரைகளைக் கூர்ந்து ஆராயின், அவர் கல்வியைப் பயன்கொடுக்கும் ஒன்றாகவே பிரதானமாகக் கருதினார் என்பதும், அதுவும் மிகக் குறுகிய அரசாங்க சேவை என்ற அளவுடனேயே நோக்கினார் என்பதும் விளங்கும்.

கல்வியைப் பற்றிய அவரின் ஆலோசனைகளும் விதப்புரைகளும், "சிவில் தாபனங்கள்", "சுதேச மக்களின் உத்தியோகம்" என்பன பற்றிய விதப்புரைகளைப் பின்பற்றியே எழுந்தனவென்பது குறிப்பிடத்தக்கது. அறிக்கையின் இவ்விரு பகுதிகளும் கல்வியைப் பற்றி அவர் கொண்ட கருத்துக்களைத் தெளிவுறுத்தல் மட்டுமின்றி அவர் கூறும், விதப்புரையின் நோக்கத்தையும் அதிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேற்றையும் விளக்குமுகமாய் அமைந்துள்ளன. அக்காலத்தில் சிவில்சேவை உத்தியோகத்திலுள்ளவர்கள் பிரித்தானியாவிலிருந்தே நியமனம் பெற்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அதில் 38 அங்கத்தவர் உளர் என்றும், அச்சேவையில் 25 உயர்தரப் பதவிகள் ஐரோப்பியர்களுக்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்பதையும் எடுத்துக்காட்டினார். ஆகவே, இச்சேவைக்குத் தெரிந்தெடுக்கும் வகை மட்டுப்படுத்தப்பட்டது என்று கூறுகின்றார். கண்டிப்பகுதியில் இராணுவ உத்தியோகத்தரையே சிவில்சேவை ஊழியர்களாக நியமனம் செய்யும் நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினார். இங்கு வந்து குடியேறிய ஐரோப்பியரின் பிற்சந்ததியினரிற் சிலர், (பறங்கியர்) கல்வியால் பெரும் பயன் அடைந்து, அரசாங்க உத்தியோகத்தில் நியமனம் பெற்று, மிக உபயோகமான சேவையாற்றி நன்மதிப்புப் பெற்றனர். அரசாங்க சேவையில் வகுப்பு பேதமின்றிக் கல்வித் தரத்திற்கேற்பவே உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படவேண்டும் என்று மிகத் தீவிரமாக வாதாடியுள்ளார். பிரித்தானியருக்கென ஒதுக்கி வைக்கும் முறை கைவிடப்படல் வேண்டும் என்றார். இந்நாட்டவரும் அம்மேலான பதவிகளில் சிலவற்றைப் பெறக்கூடிய தகுதியடைவதற்கான கல்வி வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

[பக் 9 ஐப் பார்க்க.

தலைப்பு :..........................................................................................................

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

சொற்களின் எண்ணிக்கை :..................................

[பக் 10 ஐப் பார்க்க.

38. பின்வரும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு சுமார் **300** சொற்களில் பகுப்பாய்வுக் கட்டுரை **ஒன்றை** எழுதுக.

இன்றைய சமகால இலங்கைச் சமூகத்தில் பாடசாலைகளை பால், இனங்கள் அல்லது மொழி அடிப்படையில் வேறு பிரித்தல் தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் நிலவுகின்றன. இத்தகைய வேறுபடுத்தலால் பிரதிகூலங்களை விட அனுகூலங்களே அதிகம் உள எனச் சிலர் விவாதிக்கின்றனர். எனினும் வேறு சிலர் இதற்கு எதிரான கருத்துடையோராய் உளர். இது தொடர்பாக உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

உங்களுடைய கருத்தினை நிறுவுவதற்குத் திட்டவட்டமான காரணங்களையும் உதாரணங்களையும் பயன்படுத்துக.

- கட்டுரைக்கு புள்ளி வழங்கும் போது, உள்ளடக்கம், மொழிப் பயன்பாடு, வாக்கியப்பிழை என்பவற்றோடு திட்டமிடல் / ஒழுங்கமைப்பு, தொகுப்பு, முடிவுரை என்பனவும் கவனத்தில் கொள்ளப்படும்.
- குறிப்பிடப்பட்ட சொற்களின் அளவை விட **25 சொற்கள் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ** எழுதி இருப்பின் **புள்ளிகள் குறைக்கப்படும்.**

*(25 புள்ளிகள்)*

தலைப்பு :......................................................................................................

[பக் 11 ஐப் பார்க்க.

***